We Shine Academy™
guiding you to get through

# TNPSC Group-IV Model Question Paper

## பொது தமிழ்

**Questions: 100** **TNPSC VAO-003** **Duration : 60mins**

1. ‘பழச்சுவை’ இலக்கணக்குறிப்பு தருக
   a) ஐந்தாம் வேற்றுமைத் தொகை b) ஆறாம் வேற்றுமைத் தொகை
   c) ஏழாம் வேற்றுமைத் தொகை d) மேற்கண்டவற்றுள் எதுவுமில்லை

2. பொருத்துக
   a) வதுவை - 1. ஆட்டுக்கிடாய்
   b) தகர் - 2. வலிமை
   c) இட்டிது - 3. திருமணம்
   d) மொய்ம்பு - 4. சிறியது
   a) 3 4 1 2 b) 2 3 4 1 c) 3 1 4 2 d) 2 4 3 1

3. பின்வரும் கூற்றினை ஆய்க.
   கூற்று I : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணியாகும்.
   கூற்று II: சிந்தாமணி என்பதற்கு ஒளி குன்றாத மணி என்பது பொருள்.
   கூற்று III: இந்நூலை இயற்றிய திருத்தக்கதேவர் என்ற புலவர் சோழ நாட்டினைச் சேர்ந்த சமண சமயஞ்சார்ந்த துறவி.
   கூற்று IV : இந்நூலுக்கு நரி விருத்தம் என்ற பெயரும் உண்டு.
   கூற்று V: இந்நூலுக்கு உரைகண்டவர் உச்சிமேற் புலவர் நச்சர் ஆவார்.
   a) அனைத்தும் சரியானவை b) I, II, V மட்டும் சரியானவை
   c) II, IV மட்டும் தவறானவை d) IV, V மட்டும் தவறானவை

4. ‘பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா’ என்று வியந்தவர்
   a) பாரதியார் b) பாரதிதாசன் c) கவிமணி d) கண்ணதாசன்

5. தூதின் இலக்கணம் கூறும் நூல்
   a) தொல்காப்பியம் b) விவேக சிந்தாமணி
   c) இலக்கண விளக்கம் d) யாப்பருங்கலம்



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com

6. ‘குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரையணுகி’ இப்பாடலடியில் காணப்படுவது
a) இயல்பு நவிற்சியணி
b) உயர்வு நவிற்சியணி
c) தற்குறிப்பேற்றணி
d) இல்பொருளுவமை அணி

7. சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரம்
a) புனர்பூசம் b) திருவாதிரை c) மகம் d) விசாகம்

8. புத்தேளுலகு - பிரித்தெழுதுக‘
a) புதுமை + ஏழு + உலகு
b) புதுமை + தேள் + உலகு
c) புத்தேள் + உலகு
d) பூ + தேள் + உலகு

9. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க.
கூற்று I: தமிழரசி குறவஞ்சி என்ற நூலின் ஆசிரியர் தமிழவேள் உமாமகேசுவரனார்
கூற்று II: இந்நூலைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பவளவிழாவின் போது ஞானியாரடிகள் தலைமையில் அரங்கேற்றினார்
a) இரண்டும் சரியானவை
b) இரண்டும் தவறானவை
c) I மட்டும் சரியானது
d) II மட்டும் சரியானது

10. குறிப்புப்பொருள் உத்தி என அழைக்கப்படுவது
a) உள்ளுறை உவமை
b) இறைச்சி
c) மேற்கண்ட இரண்டும்
d) மேற்கண்டவற்றுள் எதுவுமில்லை

11. ‘உண்டனன் வந்தான்’ - இலக்கணக் குறிப்பு தருக.
a) தெரிநிலை வினைமுற்றெச்சம்
b) குறிப்பு வினைமுற்றெச்சம்
c) தெரிநிலை வினைமுற்று
d) குறிப்பு வினைமுற்று

12. தேவாரம் என்ற சொல்லின் ‘தே’ என்ற அடிச்சொல்லின் பொருள்
a) தேடுதல் b) தேம்புதல் c) தெய்வம் d) தேக்கம்

13. பொருந்தா இணையைக் கண்டறி.
a) பகல் வெல்லும் - ஏழாம் வேற்றுமைத் தொகை
b) இகல் வெல்லும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
c) அருவினை - பண்புத் தொகை
d) அருந்தவர் - வினையாலணையும் பெயர்

14. திரிகடுகத்தை இயற்றியவர்
a) காரியாசான் b) நல்லாதனார் c) நாகனார் d) நல்லந்துவனார்

15. மண்தேய்த்த புகழினான் எனப்பட்டவன்
a) அனுமன் b) விபீடணன் c) கோவலன் d) ஆபுத்திரன்

16. இரண்டாம் குலோத்துங்க சோழனின் மற்றொரு பெயர்
a) கங்கை கொண்ட சோழன்
b) சுங்கம் தவிர்த்த சோழன்
c) கிருமி கண்ட சோழன்
d) மும்முடிச் சோழன்


The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy TM

17. கமலாம்பாள் சரித்திரம் யாரால் எழுதப்பட்டது?

a) ராஜம் அய்யர் b) லட்சுமி c) சிவசங்கரி d) வேதநாயகம் பிள்ளை

18. 'மந்திரமாவது நீறு' என்று துவங்கும் பாடலைப் பாடியவர்

a) திருமூலர் b) ஞானசம்பந்தர் c) சுந்தரர் d) மங்கையர்க்கரசியார்

19. பின்வரும் கூற்றுகளுள் தவறானது எது?

a) உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற எண்பது பாக்களாலாகிய நூலையும் படைத்துள்ளார்.

b) திருத்தக்க தேவர் நரிவிருத்தம் என்ற நூலையும் படைத்துள்ளார்.

c) மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை சிவகாமி சரிதம் என்ற நூலையும் படைத்துள்ளார்

d) குமரகுருபரர் மதுரை மும்மணிக்கோவை என்ற நூலையும் படைத்துள்ளார்.

20. 'கோடிகம்' பொருளறிக

a) காற்று b) பாம்பு c) ஆடை d) மணம்

21. பொருத்துக,

i) கடிநறை - 1. வினைத்தொகை

ii) படுவிடம் - 2. முதற்குறை

iii) மரைமலர் - 3. உரிச்சொற்றொடர்

iv) மலர்க்கால் - 4. உவமைத்தொகை

a) 3 1 2 4 b) 3 1 4 2 c) 1 4 3 2 d) 1 3 4 2

22. 'மருவுக' எதிர்ச்சொல் தருக.

a) ஒருவுக b) விரும்புக c) தருக d) ஓங்குக

23. கற்றார்முன் கற்ற செலச் சொல்லுபவர்

a) அவையனைத்தும் அஞ்சாதவர் b) கல்லாதவரின் கடையர்

c) கற்றாருள் கற்றார் d) பிச்சைப்புகினும் கற்றார்

24. 'நன்னாப்பண்' - சொற்களைப் பிரித்து எழுதுக

a) நன்மை + பண் b) நன்மை + நாப்பன் c) நன்னா + பண் d) நன்மை + நா + பண்

25. 'பங்குறை மங்கை' எனப்படுபவள்

a) கங்கை b) பார்வதி c) சீதை d) கண்ணகி

26. பின்வரும் கூற்றினை ஆய்க.

கூற்று I: மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விளக்கி கூறும் பழைய வரலாற்று நூல் திருவிளையாடற்புராணம்.

கூற்று II: இந்நூல் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க்கண்டம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

கூற்று III: இந்நூலில் மேற்கூறிய காண்டங்களில் முறையே 18, 30, 16 படலங்கள் அமைந்துள்ளன.

கூற்று IV : இந்நூல் 3360 பாடல்களைக் கொண்டுள்ளதாகவும் பெரிய புராணத்திற்கு அடுத்ததாகப் பெருமை பெற்றதாகவும் விளங்குகிறது.



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy TM

a) அனைத்தும் சரியானவை b) I, II மட்டும் சரியானவை
c) I, II, III மட்டும் சரியானவை d) I, II, IV மட்டும் சரியானவை

27. அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது எனக்கூறியவர்
a) சிவஞான சித்தியார் b) ஔவையார் c) திருவள்ளுவர் d) திருமூலர்

28. புறநானூற்றின் கண் காணப்படும் புறத்திணைகள் மற்றும் துறைகள் முறையே
a) 12, 60 b) 11,60 c) 12, 65 d) 11, 65

29. பின்வருவனவற்றுள் ஒற்றளபெடையுள் அளபெடுக்காத எழுத்து
a) ங் b) ஞ் c) வ் d) ர்

30. 'துயின்றாள்' - இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.
a) துயிலும் b) துயில் c) துயின்ற d) துயில

31. "Documentary" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை அறிக.
a) தொலைக்காட்சித் தொடர் b) விளக்கத் திரைப்படம்
c) சினிமாப்படம் d) டாக்குமெண்டரி படம்

32. கீழ்க்கண்ட சொற்றொடர்களை ஆராய்க.
I: சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு
II: இவற்றுள் சிவஞானபோதம் என்ற நூல் தலையாயது
III: இவற்றுள் மிக அதிகமான நூல்களை எழுதியவர் சிவஞானசித்தியார்
IV: இவற்றுள் மிகப்பெரிய நூல் பெரிய புராணம்.
a) அனைத்தும் சரியானவை b) I, IV மட்டும் சரியானவை
c) I,II மட்டும் சரியானவை d) I, II, III மட்டும்

33. 'கல்லைப் பெண்ணாக்கு மலர்க்காலினான்' யார்?
a) இந்திரன் b) குகன் c) இராமன் d) கும்பகர்ணன்

34. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?
a) தால் b) செங்கீரை c) சிற்றில் d) அரிவை

35. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | **இலை** | **இளை** |
|---|---|---|
| a) | செடி | மூச்சு |
| b) | கொடி | ஓடுதல் |
| c) | முற்றிய தளிர் | மெலிதல் |
| d) | விரிப்பு | சுத்தம் |

36. "அந்தரத்தில் மேடை அமைத்தார் - அங்கே
அனுப்பிய மின்விசையாற் செய்தி அறிவார்" - சீர்மோனை சுட்டுக.
a) அந்தரத்தில் -- அனுப்பிய
b) அந்தரத்தில் -- அமைத்தார்


We Shine Academy™
The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com

c) அனுப்பிய -- அமைத்தார்
d) அங்கே -- அறிவார்

37. ‘இயற்கை ஓவியம்’ எனும் பெருமைக்குரிய நூல்
a) சிலப்பதிகாரம் b) கம்பராமாயணம் c) வில்லிபாரதம் d) பத்துப்பாட்டு

38. ‘சுக்கு’ - என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.
a) வினைத்தொகை b) காலப்பெயர் c) வேற்றுமைத் தொகை d) குற்றியலுகரம்

39. எட்வின் ஆர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ‘Light of Asia’ என்னும் நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட நூல்
a) ஆசியஜோதி b) மனோன்மணீயம்
c) தேம்பாவணி d) மேற்கண்டவற்றுள் எதுவுமில்லை

40. தஞ்சை வேதநாயக சாத்திரியார் இயற்றாத நூல் எது?
a) ஞானத்தச்சன் b) ஞானவுலா c) பெத்லகேம் குறவஞ்சி d) பெண்மதிமாலை

41. நாலாயிர திவ்யபிரபந்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள்
a) வடகலை வைணவர்கள் b) கீழ்நிலை வைணவர்கள்
c) நடுகலை வைணவர்கள் d) தென்கலை வைணவர்கள்

42. ‘கோக்கோதை நாடு’ எனக் குறிப்பிடப்பட்டது.
a) சோழநாடு b) பாண்டியநாடு c) சேரநாடு d) தொண்டைநாடு

43. முறையாக அமைந்த சொற்றொடரைத் தேர்வு செய்க.
a) உரைசால் ஏத்துவர் உயர்ந்தோர் பத்தினியை
b) உயர்ந்தோர் ஏத்துவர் உரைசால் பத்தினியை
c) பத்தினியை ஏத்துவர் உரைசால் உயர்ந்தோர்
d) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்

44. மரபுப் பிழைகளற்ற தொடரைக் காண்க.
a) காகம் கீச்சிடும் b) காகம் கொக்கரிக்கும் c) காகம் கரையும் d) காகம் கத்தும்

45. முடியரசனின் படைப்பு எது.
a) பூங்கொடி b) காவியப்பாவை c) வீரகாவியம் d) இவை மூன்றும்

46. “எல்லா மொழிகட்கும் அடிப்படை ஒன்றே, அஃது ஒலி அல்லது நாதம்” -- என்றவர்
a) திரு.வி.க. b) தொல்காப்பியர் c) கால்டுவெல் d) கம்பர்

47. மனித வாழ்வில் உண்மையான அடிப்படையாக உள்ள இரண்டு என மு.வ. கூறுபவை
a) கல்வி, உழைப்பு b) கல்வி, நட்புறவு c) கூட்டுறவு, உழைப்பு d) கூட்டுறவு, கல்வி

48. செய்யுளில் அமைந்துள்ள சொற்களை ஓர் அடிக்குள்ளே மாற்றிப் பொருள் கொள்வது
a) மொழிமாற்றுப் பொருள்கோள் b) நிரல்நிறைப் பொருள்கோள்



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy ™

c) கொண்டுகூட்டுப் பொருள்கோள் d) அடிமறிமாற்றுப் பொருள்கோள்

49. ரஸம் என்னும் வடசொல் தமிழில் எவ்வாறு பொருள் கொள்ளப்படும்?
a) தண்ணீர் b) சாறு c) சுவை d) இவை அனைத்தும்

50. 'கொள்வீர்' - என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.
a) ஏவல் பன்மை வினைமுற்று b) தொழிற்பெயர்
c) ஏவல் ஒருமை வினைமுற்று d) விளி வேற்றுமை

51. கல்வி, தறுகண், இசை, கொடை என்ற நான்கும் பற்றி பிறப்பது
a) நகை b) உவகை c) பெருமிதம் d) இளிவரல்

52. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
a) கற்றல், காற்று, கோடை, கூண்டு, கெண்டை, குடும்பம்
b) கூ, கோ, க, கா, கெண்டை, குடும்பம்
c) க, கூ, கெ, கா, கு, கோ
d) க, கா, கு, கூ, கெ, கோ

53. பொருந்தாச் சொல்லைத் தேர்க.
a) பரணி b) பிள்ளைத்தமிழ் c) அந்தாதி d) கலித்தொகை

54. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்க.
a) சிதம்பரனார் செய்நன்றி மறவாச் செம்மல்
b) சிதம்பரனார் செய்ந்நன்றி மறவா செம்மல்
c) சிதம்பரனார் செய்நன்றி மறவா செம்மல்
d) சிதம்பரனார் செய்ந்நன்றி மறவாச் செம்மல்

55. பொருத்துக.
i. அள்ளல் -- 1. வயல்
ii. பழனம் -- 2. பறவை
iii. புள் -- 3. இடை
iv. மருங்கு -- 4. சேறு
a) 4 2 1 3 b) 4 1 2 3 c) 2 3 4 1 d) 2 4 1 3

56. இரட்டைப் புலவர்களால் பாடப்பட்ட நூல்
a) தில்லைக் கலம்பகம் b) மதுரைக்கலம்பகம்
c) திருவரங்கத்தந்தாதி d) திருவாரூர் மும்மணிக்கோவை

57. சிலப்பதிகாரத்தில் அம்மானைவரியில் பாடப்பட்ட மன்னன்
a) சேரமன்னன் b) பாண்டிய மன்னன்
c) சோழ மன்னன் d) இவர்களுள் எவருமில்லை

58. ஒரு பொருளைக் குறித்து நூறு செய்யுள் பாடுவது
a) பதிகம் b) சதகம் c) பிரபந்தம் d) பண்ணத்தி


The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy™

59. சாதி இரண்டொழிய வேறில்லை ..... என்ற ஔவையாரின் பாடல் எந்நூலில் காணப்படுகின்றது?

a) ஆத்திசூடி b) கொன்றை வேந்தன் c) நல்வழி d) மூதுரை

60. பெண்களால் விளையாடப்படாத விளையாட்டு

a) கிளித்தட்டு b) வரிப்பந்து c) கழங்கு d) ஊசல்

61. கீழ்க்கண்ட கூற்றுக்களுள் சரியானதைத் தேர்க.

I: தூதுவளை ஒரு கொடி வகைக் கீரை

II: இதன் பழம், சிவப்பு நிறமுடையது

III: சிங்கவல்லி என வேறுபெயராலும் அழைக்கப்படும்

IV: ஞானப் பச்சிலை என வள்ளலார் இந்த இலையைப் போற்றினார்.

a) அனைத்தும் b) II-ஐ தவிர c) II, IV-ஐ தவிர d) II, III-ஐ தவிர

62. நடுக்கடலில் செல்லும் கப்பலைப் போன்று கோட்டை இருந்ததென எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

a) அகநானூறு b) புறநானூறு c) மதுரைக்காஞ்சி d) பட்டினப்பாலை

63. மெய்யெழுத்துகள் எத்தனை விதமான முயற்சிப் பிறப்புகளின் மூலமாக பிறக்கின்றன?

a) 3 b) 7 c) 9 d) 11

64. பொருந்தாச் சொல்லைத் தேர்க.

a) வெட்சி b) உழிஞை c) வஞ்சி d) வாகை

65. பகை என்னும் பொருள் தரும் சொல்

a) செற்றம் b) முற்றம் c) சுற்றம் d) மாலை

66. தமிழர்கள் கொண்டாடும் முக்கியத் திருவிழாக்களில் ஒன்று

a) பொங்கல் b) தீபாவளி c) தைப்பூசம் d) மகாசிவராத்திரி

67. பின்வரும் கூற்றுகளுள் தவறானதைக் கண்டறி

a) ஏவல் வினைமுற்று முன்னிலை இடத்தல் மட்டுமே வரும்

b) ஏவல் வினைமுற்றை வியங்கோள் வினைமுற்று என வழங்குவர்

c) ஏவல் வினைமுற்று கட்டளைப் பொருளில் மட்டும் வரும்

d) ஒருமை, பன்மை பாகுபாடு ஏவல் வினைமுற்றில் உண்டு

68. “ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்” எனக் கூறும் இலக்கியம் எது? இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

a) கம்பராமாயணம், சீதை b) சிலப்பதிகாரம், கண்ணகி

c) பாஞ்சாலிசபதம், திரௌபதி d) சிலப்பதிகாரம், மாதவி

69. பொருத்துக:

a) பனிப்போர்வை -- 1. பண்புத்தொகை

b) பூங்கழல் -- 2. உருவகம்



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com

c) முழங்குமுரசு -- 3. உவமைத்தொகை
d) சிற்றில் -- 4. வினைத்தொகை
a) 3 4 1 2 b) 2 3 4 1 c) 2 4 3 1 d) 3 1 4 2

70. "மாசற்ற மனங்கொண்டவர் இல்லறம் நல்லறமாகும்" - விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.
a) எவர் இல்லறம் நல்லறமாகும்?
b) எதற்காக இல்லறம் நல்லறமாகும்?
c) மாசற்ற மனங்கொண்டவர் எங்கு நல்லறமாவார்?
d) மாசற்ற மனங்கொண்டவர் இல்லறம் நல்லறமாகுமா?

71. பொருந்தா இணையைக் கண்டறி
a) நூ - அணிகலன் b) மா - மாமரம் c) கு - நிலம் d) மே - மேகம்

72. நிரையீற்று மூவசைச்சீர் வேறு எவ்வாறு அறியப்படுகிறது?
1. மாச்சீர் 2. விளச்சீர் 3. காய்ச்சீர் 4. கனிச்சீர் 5. ஆசிரிய உரிச்சீர்
6. இயற்சீர் 7. வெண்பா உரிச்சீர் 8. வஞ்சியுரிச்சீர்
a) 1, 2, 5 மட்டும் b) 1, 2, 6 மட்டும் c) 4, 8 மட்டும் d) 3, 7 மட்டும்

73. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
a) தத்தை b) மஞ்ஞை c) சுகம் d) கிள்ளை

74. பிறவினை வாக்கியத்தைக் கண்டறிக.
a) கந்தன் பாடம் எழுதினான் b) மாடு ஓடியது
c) கமலா பாட்டு பாடினாள் d) சினத்தை அடக்குவது நல்லது

75. சேர, சோழ, பாண்டிய மன்னர்களை "வான்புகழ் மூவர்" எனக் குறிப்பிடும் நூல்?
a) அகத்தியம் b) தொல்காப்பியம் c) சிலப்பதிகாரம் d) மணிமேகலை

76. "பொன்னிக்கு கரைகண்ட பூபதி" என்று போற்றப்படுபவர் யார்?
a) ஆதித்ய சோழன் b) பராந்தகச் சோழன் c) கரிகாலச்சோழன் d) அருள்மொழிவர்மன்

77. "சின்னமனூர் செப்பேடு" யாரைப்பற்றி குறிப்பிடுகிறது?
a) முதுகுடுமி பெருவழுதி b) காரவேலன்
c) பாண்டிய நெடுஞ்செழியன் d) சேரன் செங்குட்டுவன்

78. சென்னிமலை அண்ணாமலை ரெட்டியார் எழுதிய காவடிச்சிந்து எந்தக் கடவுளைப் பற்றியது?
a) முருகப்பெருமான் b) சிவபெருமான் c) விநாயகர் d) திருமால்

79. 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற இலக்கண விதியின்படி புணர்ந்த செல் எது?
a) கருத்ததனுள் b) நாட்டுப்பற்று c) பதிவெண் d) நாடியாது

80. பொருத்துக.
a) ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் -- 1. ஆலந்தூர் கு. மோகனரங்கன்
b) பறப்பதென்றால் அறியாமை பறக்க வேண்டும் -- 2. பாவேந்தர் பாரதிதாசன்


The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com

c) நல்ல நிலை காண வைத்திடும் பெண் கல்வி -- 3. சௌந்தரா கைலாசம்
d) வெல்லட்டும் பெண்மையென விளித்தகுரல் கேட்கிறது -- 4. பாரதியார்
a) 4 1 2 3 b) 2 4 1 3 c) 3 1 4 2 d) 3 4 2 1

81. பின்வரும் நூல்களுள் சாகித்திய அகாதமி பரிசு பெற்றது எது?
a) தென்றல்திரை b) ஒரு கிராமத்து நதி c) சூரியகாந்தி d) சித்திரப்பாவை

82. பின்வரும் கூற்றுகளுள் சரியானதைக் கண்டுபிடி.
I : வீரசோழியம் என்பது ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல் ஆகும்.
II : வீரராசேந்திர சோழன் விருப்பத்திற்கு ஏற்ப புத்தமித்திரரால் எழுதப்பட்டது.
III : இந்நூலுக்கு பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.
a) I, II மட்டும் b) I, III மட்டும் c) II, III மட்டும் d) அனைத்தும்

83. “பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும் விருந்துமன்றி விளைவனயாவையே” என்ற கம்பரின் கூற்றிலிருந்து அறிய வரும் செய்தி
a) முற்காலத்து பெண்கள் எல்லாருங் கல்வியில் வல்லவர்களாய் இருந்தனர்
b) முற்காலத்து பெண்கள் எல்லாருங் வீரத்தல் வல்லவர்களாய் இருந்தனர்
c) முற்காலத்து பெண்கள் எல்லாருங் விருந்து சமைப்பதில் திறமை கொண்டு இருந்தனர்
d) முற்காலத்து பெண்கள் எல்லாருங் ஈகையில் ஈடுபட்டிருந்தனர்

84. ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் இருக்குமாறு பாடுவது
a) வெண்பா b) ஆசிரியப்பா c) கலிப்பா d) வஞ்சிப்பா

85. “அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்” -- என்ற அடிகளில் சுட்டப்படுபவர் யார்?
a) தாயுமானவர் b) மாணிக்கவாசகர் c) கண்ணப்பர் d) திருமூலர்

86. பின்வரும் கூற்றுகளை ஆய்ந்து சரியானதைத் தேர்க.
I : கிரேக்கர்களின் பழங்காப்பியம் எனப் பாராட்டப்படுவது இலியட் என்னும் நூல்
II : இந்நூலைப் பாடியவர் ஹோமர்
III : மெனலஸ், ஹெலன், பாரிஸ், ஈனியஸ் போன்ற கதை மாந்தர்கள் இந்நூலில் காணப்படுகின்றனர்.
IV: இந்நூல் சோகச்சுவை ததும்ப இருப்பதனால் படிப்போரின் உள்ளம் கலங்குவதாக உள்ளது.
a) அனைத்தும் சரியானவை b) I, II, III மட்டும் சரியானது
c) I, II மட்டும் சரியானது d) I, III, IV மட்டும் சரியானது

87. ‘கோற்றொடியார்’ பொருளறிக.
a) உலக்கையைத் தொடியணிந்த கையில் கொண்ட பெண்கள்
b) வளையலைத் தொடியணிந்த கையில் கொண்ட பெண்கள்
c) கோழியைக் கொடியாக கையில் கொண்ட முருகன்


The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy TM

d) சேவலைக் கொடியாக கையில் கொண்ட முருகன்

88. பின்வரும் கூற்றுகளுள் தவறானதைக் கண்டறியவும்

I : பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி எனப் போற்றப்படுபவர் பெரியாழ்வார்

II : இவர் பாடிய பெருமாள் திருமொழியில் ராமனைப் பிள்ளையாக பாவித்து பாடிய பாடல்கள் காணப்படுகின்றன.

III : இவர் பாடிய திருமொழியே நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் முதல் பாடலாக அமைந்துள்ளது.

IV: இவர் பாடிய திருப்பல்லாண்டே வேதத்தின் வித்து என போற்றப்படுகிறது.

a) I, II மட்டும் b) I, IV மட்டும் c) II, III மட்டும் d) II, IV மட்டும்

89. பொருத்துக:-

a) குறளடி -- 1. 15 முதல் 17 எழுத்துகள்

b) சிந்தடி -- 2. 4 முதல் 6 எழுத்துகள்

c) அளவடி -- 3. 7 முதல் 9 எழுத்துகள்

d) நெடிலடி -- 4. 10 முல் 14 எழுத்துகள்

a) 3 4 1 2 b) 2 3 4 1 c) 2 4 3 1 d) 3 1 4 2

90. பின்வரும் கூற்றுகளை ஆய்க.

கூற்று I : கறுப்பு மலர்கள் என்ற கவிதை தொகுப்பு நூலினை எழுதியவர் நா. காமராசன் ஆவார்

கூற்று II : இந்நூல் 1971-ல் வெளிவந்தது.

a) I மட்டும் சரியானது b) II மட்டும் சரியானது

c) இரண்டும் சரியானவை d) இரண்டும் தவறானவை

91. இரட்சணிய மனோகரத்தின் பெரும்பகுதி எந்நூலிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டது?

a) இரட்சணிய யாத்திரிகம் b) இரட்சணிய பாலபோதனை

c) இரட்சணியக்குறள் d) போற்றித் திருவகவல்

92. ‘மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லேன்’ என்ற பாடலின் மூலம் சுட்டப்படுபவர் யார்? இப்பாடலைப் பாடியவர் யார்?

a) பட்டினத்தடிகள், திருநீலகண்டர் b) திருநீலகண்டர், பட்டினத்தடிகள்

c) சேக்கிழார், சிறுத்தொண்டர் d) சிறுத்தொண்டர், சேக்கிழார்

93. “பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா” என்பது யாருடைய கூற்று

a) காந்தியடிகள் b) அன்னை தெரசா c) கன்பூஷியஸ் d) முகமது சாகேப்

94. தவறான இணையைக் கண்டறி

a) களிற்று யானை நிரை - 1 - 100

b) மணிமிடைப் பவளம் - 180 பாட்டுகள்

c) மருதத்திணை பாடல்கள் வரிசை - 6, 16, 26, ..................

d) முல்லைத்திணை பாடல்கள் வரிகை - 4, 14, 24, ....................



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy™

பின்வரும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட கேள்வி எண் 95 முதல் 97 வரை பதில் வழங்கவும்:

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத்தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

95. மேற்கூறப்பட்ட திருக்குறளில் பயின்று வருவது

a) உவமையணி
b) எடுத்துக்காட்டு உவமையணி
c) உருவக அணி
d) ஏகதேச உருவக அணி

96. இக்குறளில் காணப்படுவது

a) அடிமோனை b) அடியெதுகை c) அடிமுரண் d) இனமோனை

97. கூற்றை ஆராய்க:

I: தொல்காப்பியம் தமிழின் தனித்துவத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது.
II: தொல்காப்பியத்தல் 3 அதிகாரங்களும் அதிகாரத்திற்கு இயல்களும் உள்ளன.
III : தொல்காப்பியத்தின் இயல்களின் மரபியல் இடம் பெறவில்லை

a) கூற்று I மட்டும் சரி b) II, III-ம் சரி c) I, II-ம் சரி d) அனைத்தும் சரி

98. 'வடதிசை வணங்கிய மன்னவன்' என்று புகழப்பட்டவர்

a) கோவலன் b) சேரன் செங்குட்டுவன் c) கரிகாலன் d) பாண்டிய நெடுஞ்செழியன்

99. ஆய் ஆதரித்த உரையூர் புலவரும், பாரியின் ஆருயிர் நண்பர் கபிலரும் பிராமணர்கள் என்று கூறியவர்

a) ஆர். சத்திய நாதய்யர்
b) கே.கே. பிள்ளை
c) ந. சுப்பிரமணியன்
d) கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

100. பொருத்துக:

a) பரம்ப மலை -- 1. நல்லி
b) பொதிகை மலை -- 2. ஓரி
c) கொல்லி மலை -- 3. ஆய்
d) தொட்டி மலை -- 4. பாரி

a) 4 3 2 1 b) 4 3 1 2 c) 4 2 3 1 d) 4 1 2 3



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com
We Shine Academy™

**Answer Key**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.b | 2. c | 3. d | 4. a | 5. c | 6. d | 7. b | 8. c | 9. b | 10. c |
| 11. a | 12. c | 13. d | 14. b | 15. c | 16. c | 17. a | 18. b | 19. d | 20. c |
| 21. a | 22. a | 23. c | 24. b | 25. b | 26. a | 27. b | 28. d | 29. d | 30. b |
| 31. b | 32. c | 33. c | 34. d | 35. c | 36. b | 37. d | 38. d | 39. a | 40. d |
| 41. d | 42. c | 43. d | 44. c | 45. d | 46. a | 47. c | 48. a | 49. c | 50. a |
| 51.c | 52. d | 53. d | 54. c | 55. b | 56. a | 57. c | 58. b | 59. c | 60. a |
| 61. a | 62. b | 63. d | 64. d | 65. a | 66. a | 67. b | 68. d | 69. b | 70. a |
| 71. d | 72. c | 73. b | 74. d | 75. b | 76. c | 77. c | 78. a | 79. c | 80. a |
| 81. b | 82. d | 83. a | 84. b | 85. c | 86. c | 87. a | 88. d | 89. b | 90. c |
| 91. a | 92. b | 93. d | 94. a | 95. a | 96. b | 97. c | 98. b | 99. d | 100. a |

We Shine Academy™



The Best Coaching Institute For Bank, TNPSC, SSC, Railway Exams, Spoken English & German Language
:8939 244 344 www.weshineacademy.com